IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 36 /2014

Deposition of witness for PW2

Name : ரவி

Father Name : தெய்வசிகாமணி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 day of March, 2021.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது மனைவியின் தாய் மற்றும் தந்தை என்னிடம் 25.1.1990 -ல் ரூ.7,000/-மும் 2வது தவணையாக 2.2.1991 -ல் ரூ.5,000/-மும் கடன் பெற்றுக்கொண்டார்கள். எனது மாமியார் ஜெயம்மாவிற்கு சிகிச்சை எடுப்பதற்காக கடன் பெற்றார்கள். கடன் பெற்று எனக்கு வட்டி செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. வட்டி செலுத்தவில்லை. எனது நிரூபணவாக்கமூலத்தில் ஜெயம்மாள் என்னிடம் பெற்றுக்கொண்ட கடனுக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றும், சுவாதீனம் எடுத்துக்கொண்டேன் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விவரத்தை எனது மனைவி அவரது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்த விவரம் பொய் என்றால் சரியல்ல. எனது மனைவி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குமூலத்திலோ, எனது மனைவியின் நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாதியினுடைய தகப்பனார் 30.9.1993 அன்று வாதியினுடைய அண்ணனுக்கு உயில் எழுதி வைத்த விவவத்தை எனது மனைவி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குமூலத்திலோ, எனது மனைவியின் நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 12.4.1989-ல் செட்டில்மெண்ட் மூலமாக எனது மனைவியின் தாயாருக்கு எனது மனைவியின் தந்தை எழுதி வைத்தார் என்ற விவரத்தையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியின் தகப்பனார் பாகப்பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்தை தான அவர் உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அது கூட்டுக்குடும்ப சொத்து அல்ல என்றும், அவருக்கு

பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கின் போக்கை மாற்றக்கூடியது என்றும், வா.சா.1-க்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதிச்சீட்டுக்கள் 25 ஆண்டுகள் கழித்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த பிறகும் கூட வைத்திருப்பது நம்பத்தகுந்ததல்ல அவை வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது மனைவியின் தாயார் எனது மனைவிக்கு தானாக முன்வந்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றும், கடனுறுதிச்சீட்டின்அடிப்படையில் கடனுக்காக எழுதிதரப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கவையல்ல என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.